**கோவில்பட்டி நகராட்சி**

**சாதாரணக் கூட்டம்**

**நிகழும் விகாரி வருடம் ஐப்பசி திங்கள் 13, நாள்.29.10.2020ம் தேதி வியாழக் கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.**

**முன்னிலை:- திரு.ஒ.ராஜாராம்,பி.காம்.,**

**கோவில்பட்டி நகராட்சி** — **தனி அலுவலர்,**

**நாள்: 28.10.2020** — **கோவில்பட்டி நகராட்சி**

| மன்ற கூட்ட தேதி | வரசை எண் மற்றும் மன்றப்பொருள் | மன்றத் தீர்மானம் |
|---|---|---|
| 30.10.2020 | <u>பொருள் எண்: </u>1<br>இந்நகராட்சிக்குட்பட்ட சிதம்பராபுரம் உரக்கிடங்கில் மரங்கள் நட்டு வளர்ப்பதற்கு நீர் ஆதாரம் தேவைப்படுவதால் FSTPல் இருந்து வெளியேறும் கழிவுநீரை PVC Tank வைத்து புதிய மோட்டார் மூலம் PVC குழாய் அமைத்து நீர் செய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுச் செலவினம் ரூ.2.55/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u> :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சி விதி எண்.15ன் கீழ் வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4456/2020/இ1 | தீர்மானம் எண்.4144 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்: </u>2<br>நகர்பகுதிகளில் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு அவசியத்தைக் கருத்தில் கொண்டு கசடு கழிவு மேலாண்மை இயக்குதல் வழிமுறைகள் 2014ன் படி கோவில்பட்டி நகராட்சியில் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (1920 தமிழ்நாடு சட்டம் 5) ல் பிரிவு 306 உட்பிரிவு 5(அ), (ஆ), 5(உ) மற்றும் உட்பிரிவு 306(29)ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுரைகளின்படியும், கோவில்பட்டி நகராட்சிக்குள் சட்டப்படியான வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் கழிவறைகள் மற்றும் நச்சுத் தொட்டிகள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் கட்டிடங்களுடன் கூடிய கழிவறைகளில் இருந்து பெறப்படும் கசடு கழிவுகள் சேகரித்தல், கொண்டு செல்லுதல் | தீர்மானம் எண்.4145 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மற்றும் பாதுகாப்பாக அகற்றுதல் தொடர்பாக கட்டுப்பாடுகள் மற்றும் உபவிதிகள் ஏற்படுத்த பொதுமக்களிடையே மேற்படி உபவிதிகள் சம்பந்தமாக தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்ய மற்றும் மாவட்ட அரசிதழில் அச்சிட்டு வெளியிடவும், ஆகும் செலவுத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.7119/2019/எச்1 | |
| | <u>பொருள் எண்: 3</u><br>இந்நகராட்சி கணினி வரிவசூல் மையத்தில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் VPN இண்டர்நெட் இணைப்பிற்கு 01.10.2019 முதல் 31.12.2019 வரை ரூ.48,295/-ம் 01.01.2020 முதல் 31.03.2020 வரை ரூ.48,295/- மொத்தம் ரூ.96,590/-யை BSNL நிறுவனத்திற்கு ECS மூலம் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர் நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.487/2003/இ1 | தீர்மானம் எண்.4146<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்: 4</u><br>நகர்பகுதிகளில் பொதுசுகாதாரப்பிவு பராமரிப்பு அவசியத்தைக் கருத்தில் கொண்டு கசடு கழிவு மேலாண்மை இயக்குதல் வழிமுறைகள் 2014 வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (1920 தமிழ்நாடு சட்டம் 5)ல் பிரிவு 306 உட்பிரிவு 5(அ), (ஆ), 5(உ) மற்றும் உட்பிவு 306(29)ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுரைகளின்படியும், கோவில்பட்டி நகராட்சிக்குள் சட்டப்படியான வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் கழிவறைகள் மற்றும் நச்சுத் தொட்டிகள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் கட்டிடங்களுடன் கூடிய கழிவறைகளில் இருந்து பெறப்படும் கசடு கழிவுகள் சேகரித்தல், கொண்டு செல்லுதல் மற்றும் பாதுகாப்பாக அகற்றுதல் தொடர்பாக கட்டுப்பாடுகள் மற்றும் உபவிதிகள் ஏற்படுத்த நகர்மன்றத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.<br>1. <u>சிறுதலைப்பு. துவக்கம் மற்றும் ஏற்புடைமை.</u><br>I. இந்த உபவிதிகள் கோவில்பட்டி நகராட்சிக்கான கசடு கழிவு மேலாண்மை உபவிதிகள் என பொருள்படும்.<br>II. இந்த உபவிதிகள் தூத்துக்குடி மாவட்டம் பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள நாளிலிருந்து | தீர்மானம் எண்.4147<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | நடைமுறைப்படுத்தப்படும்.<br>**III.** இந்த உபவிதிகள் கோவில்பட்டி நகராட்சிக்கு உட்பட்ட சட்டப்படியான வரையறைக்குட்பட்ட எல்லைக்குள் உள்ள குளியலறைகள், சலவை செய்யுமிடங்கள் / கழிவறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களைக் கொண்ட குடியிருப்புகள் அல்லது வணிக நோக்கங்களுக்கான பயன்பாட்டில் உள்ள அனைத்து கட்டிடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.<br>2. **விளக்கங்கள்.**<br>இந்த உபவிதிகள் பத்தியில் உள்ள மேலும் தேவைப்படுகின்ற இனங்கள் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றிற்கான பொருள்கள் இங்கே விவரிக்கப்பட்டுள்ளன.<br>I. “விண்ணப்ப அமைப்பு” என்பது இந்த உபவிதிகள் தொடர்புடையவற்றை நேரத்திற்கு நேரம் ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் வெளியிடுகை.<br>II. “சட்டப்படியான அதிகாரம் அல்லது உரிமை” என்பது இந்த உபவிதிகளினை நடைமுறைப்படுத்துதல் நோக்கங்களுக்கான நேரத்திற்கு நேரம் வெளியிடுகை நகராட்சி அல்லது அந்த வகையிலான துறைகளுக்கு உட்பட்டவை.<br>III. “இயக்குபவர்” என்பது தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998ன்படி போட்டி ஏலமுறை நடைமுறைப்படி உள்ளாட்சி அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்கள் அல்லது கோவில்பட்டி நகராட்சியில் பதிவு செய்து அனுமதி பெறப்பட்ட கசடுகழிவுகளை சேகரித்தல் மற்றும் இடம் பெயர்த்தலுக்கான உரிமம் பெற்றவர்/நிறுவனம்/கழகம் என பொருள்படும்.<br>IV. “சுகாதார கழிவறை“ என்பது உள்ளாட்சி அமைப்புகளில் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் நடைமுறைகள், வடிவமைப்பு மற்றும் விபரங்களின்படி கட்டப்பட்ட நச்சுத்தொட்டியுடன் கூடிய அல்லது பாதாளச் சாக்கடைத் திட்டத்தில் இணைக்கப்பட்ட கழிவறை அல்லது சிறுநீர் கழிவறை என பொருள்படும்.<br>V. “சுகாதார கழிவறை“ என்பது கழிவறையில் உள்ள மலம் மனிதனால் அகற்றப்படுதல், விலங்குகளால் சுத்தப்படுத்துதல் மற்றும் மலக்கழிவுகள் முழுமையான உரமாக்குவதற்கு முந்தைய கழிவுகள் தண்ணீர் ஊற்றி, வெளியேற்றி நேரடியாக குழிகள் அல்லது திறந்தவெளி வடிகால்களில் விடுதல் என பொருள்படும். | |

VI. “கசடு கழிவு“ என்பது கழிவறைகளில் இருந்த உற்பத்தியாகும் மலக்கழிவு மற்றும் குளியலறைகள், சமையலறை, முகம், கை கழுவும் கிண்ணங்களில் இருந்து உருவாகும் வீட்டுகழிவு நீர்/குப்பைகள், முடிகள், நோய் பரப்பும் நுண்ணுயிர்கள், பசை அல்லது உய்வு எண்ணெய், நச்சுத்தொட்டிகளில் சேரும் கசடு மற்றும் படிந்துள்ள பகுதி திடபொருட்கள், திட, திரவ நிலையில் உள்ளவை என்பதைக் குறிக்கும்.

VII. “நச்சுத்தொட்டி“ என்பது உள்ளாட்சி அமைப்புகளால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் நடைமுறைகள், வடிவமைப்பு மற்றும் விபரங்கள்படி கட்டப்பட்டு கழிவுநீரினை திட நிலை பொருள் படிதல் மற்றும் காற்றுப்புகா செரிமானம் ஆகியவற்றின் மூலம் சுத்திகரிப்பு செய்யும் ஒரு நிலத்தடி தொட்டியைக் குறிக்கும்.

VIII. “ குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் “ என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அல்லது தனியார் வாகனங்கள் இயக்குபவர்களுக்கு சொந்தமான மோட்டார் பம்புகள் மற்றும் சேமிப்புத் தொட்டிகள் பொருத்தப்பட்ட கழிவுநீர் உறிஞ்சும் வசதியுடன் கூடிய வெற்றிட வாகனங்கள் ஆகும் நச்சுத்தொட்டியிலிருந்து கசடு கழிவுகளை எடுத்து சென்று வெளியேற்றுவதற்கு தேவையான வடிவமைப்பு விபரக் குறிப்புகளுக்கு அவ்வப்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஒப்புதல் வழங்கும்.

IX. “உரிமையாளர் / குடியிருப்போர்” என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடமோ அல்லது அதன் ஒரு பகுதியில் சொந்தமாகவோ அல்லது குடியிருப்போரோ அல்லது வாடகைக்கோ இருக்கும ஒரு நபர் ஆகும்.

X. “சுத்திகரிப்பு வசதி“ என்பது அவ்வப்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்ட வடிவமைப்பு குறிப்புகள் மற்றும் வழிமுறைகளை கொண்ட சுத்திகரிப்பு நிலையம் ஆகும். இது நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமானதாகவோ அல்லது அதன் சார்பில், கசடு கழிவினை சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் திறன் கொண்ட மூன்றாம் தடுப்பு நிறுவனத்திற்கு சொந்தமானதாகவோ இருக்கும்.

XI. “நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு” என்பது கோவில்பட்டி நகராட்சியினைக் குறிக்கும்.

| | | |
|---|---|---|
| | 3. உரிமையாளர் அல்லது குடியிருப்போரினால் செயல்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் உடன்பாடுகள்.<br><br>நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது அதில் முழுவதுமோ அல்லது பகுதியிலோ குடியிருப்போர், இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வந்த தேதியில் இருந்து பின்வரும் கடமைகளைச் செய்ய பொறுப்பாகிறார்.<br><br>I. துணை விதிகளின்படி அதிகாரிகள் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்ட நேரத்திற்குள் கட்டிடங்களில் சுகாதாரமில்லாத கழிவறைகளின் பயன்பாடுகளை நிறுத்த வேண்டும் மற்றும் அருகிலுள்ள பொதுவடிகால் / திறந்த நிலம் / நீர் நிலைகளில் கழிவுநீரினை வெளியேற்றுவதை நிறுத்த வேண்டும் மற்றும் சுகாதாரமான கழிப்பறைகளை சொந்தமான அல்லது குடியிருக்கும் கட்டிடத்தில் கட்டி பயன்படுத்துதல் மற்றும் பராமரித்தல்.<br><br>VII. கசடு கழிவு நிறைந்து வெளியேறாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் நச்சுத்தொட்டிகளை சரியான முறையில் பராமரிக்க நச்சு தொட்டிகள் நிறைவடைவதற்கு முன்பே உரிய அதிகாரிகளுக்கு முறையான தகவல் அளித்தல்.<br><br>VIII. முன்னறிவிப்புடன், குறித்த நேரங்களில், ஆய்வு செய்ய உரிய அதிகாரிகளை அனுமதித்தல்.<br><br>IX. கசடு கழிவுகளை சேகரிக்க மற்றும் போக்குவரத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட இயக்குவர்களையே ஈடுபடுத்துதல்.<br><br>X. கசடு கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவதற்கு குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை அளித்தல் வேண்டும்.<br>4. <u>துணை விதிகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் அமலாக்கம் செய்தல்</u><br>x. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குள் அமைந்துள்ள வீடுகளை கணக்கீடு மற்றும் ஆய்வு செய்தல் மற்றும் இந்த துணை விதிகளுக்கு இணங்கி உள்ள கட்டிடங்களுக்கு சான்றிதழ் வழங்குதல். | |

| | | |
|---|---|---|
| | XI. இந்த துணை விதிகளுக்கு உட்பட்டு செயல்படாத மற்றும் இணக்கமில்லாத கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்போருக்கு அறிவிப்பு வழங்குதல்.<br>I. துணை விதிகளின் இணக்கத்தை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.<br>II. நச்சுக்கழிவு மேலாண்மையின் விழிப்புணர்வு தொடர்பாக தகவல், கல்வி மற்றும் பரிமாற்ற பிரசாரத்தை நடத்துதல்.<br>III. இயக்குபவர்களை தேர்வு செய்து உரிமம் வழங்குதல் அல்லது ஏலப்போட்டி நடத்தி இயக்குபவரை தேர்வு செய்து உரிமம் வழங்குதல் மற்றும் உரிமம் பெற்று இயக்குபவர்களின் பெயர்களை வெளியிடுதல்.<br>IV. கசடு கழிவுகளை சேகரித்தல், எடுத்துச் செல்லுதல் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களில் வெளியேற்றுதல் ஆகியவற்றை வழிகாட்டி முறைப்படுத்தி மற்றும் கண்காணிப்பு செய்தல்.<br>V. குறிப்பிட்ட வாகனங்களின் தரம் மற்றும் பராமரிப்பினை ஆய்வு செய்து முறைப்படுத்துதல்.<br>VI. சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படும் கசடு கழிவின் தரத்தினை ஆய்வு செய்தல்.<br>VII. இந்த துணை விதியினை மீறும் உரிமையாளர்கள் குடியிருப்போர் அல்லது இயக்குபவர்கள் மீது விசாரணை மேற்கொண்டு அபராதம் விதித்தல்.<br>5. <u>இயக்குபவர்களை நியமித்தல் மற்றும் இயக்குதல்.</u><br>XV. அதிகாரிகள் துணை விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து குறிப்பிட்ட காலத்திற்குள் இயக்குபவர்களை தேர்வு செய்ய வேண்டும். ‘<br>XVI. இயக்குபவர்கள் உரிமம் பெற ஆண்டுதோறும் உரிமக்கட்டணம் ரூ.1000/-த்தை நகராட்சி கருவூலத்தில் செலுத்தி உரிமம் பெற்றுக்கொள்ள / புதுப்பிக்க வேண்டும்.<br>XVII. இயக்குபவர்களை அல்லது ஒப்பந்ததாரரை தேர்வு செய்த பின்பு இந்த துணை விதியில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின்படி உரிமம் வழங்குதல் வேண்டும்.<br>XVIII. அதிகாரிகள் அவ்வப்போது வெளியிடும் வழிமுறைகளுக்கு ஏற்ப, இயக்குபவர்கள் குறிப்பிட்ட வாகனங்கள் மற்றும் அதன் தொடர்புடைய உபகரணங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்கு பொறுப்பாகிறார்.<br>I. அதிகாரிகள் அவ்வப்போது வழங்கும் அறிவுரைகளுக்கு ஏற்ப இயக்குபவர்கள் கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கசடு கழிவுகளை அதன் செயல்திறன் தரத்தை தீர்மானித்து சேகரித்து மற்றும் எடுத்துச் செல்வதற்கு பொறுப்பாகிறார். | |

II. இயக்குபவர்கள் உரிம விதிகளுக்கு இணங்கி தொழிற்சாலை கழிவுகளையோ அல்லது தொழிற்சாலை கழிவு கலந்த கழிவு நீரையோ எடுத்துச் செல்லக்கூடாது.

III. இயக்குபவர்கள் அனைத்து உள்ளூர் சட்டங்களுக்கும் இனங்கி, இந்த உரிமத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகளை செயல்படுத்துவதற்கு தேவையான அனுமதி மற்றும் உரிமங்களை பராமரிக்க வேண்டும்.

IV. இயக்குபவர்கள் பயிற்சி பெற்ற நபர்களையே நியமித்து, கசடு கழிவுகளை சேகரித்து எடுத்து செல்வதற்கு தேவையான அனைத்து பாதுகாப்பு கருவிகளை வழங்க வேண்டும். கசடு கழிவுகளை மற்றும் கழிவுநீரை பாதுகாப்பு கருவிகள் இன்றி கையாறுதல் சட்டப்படி குற்றமாகும்.

V. அதிகாரிகள் அவ்வப்போது வழங்கும் செயல்திறன் தரத்தின்படி கசடு கழவுகள் சேகரிக்கப்பட்டு எடுத்து செல்வதை உறுதி செய்ய தேவையான அளவு நபர்களை நியமித்தல் வேண்டும்.

VI. மனித கழிவுகளை அகற்ற மனிதர்களை பணியில் அமர்த்துவதை தடை செய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்விற்கான சட்டம் 2013 மற்றும் விதிகளின்படி எந்நேரமும் இணங்கி நடப்பதை இயக்குபவர்களை உறுதி செய்ய வேண்டும்.

VII. விபத்து நடைபெறும் பொழுது அதிகாரிகளின் அறிவுரையின்படி அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் இயக்குபவர்கள் செயல்படுத்த வேண்டும்.

VIII. அதிகாரிகளால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் கழிவினை பாதுகாப்பாக வெளியேற்ற இயக்குபவர்கள் பொறுப்பாகிறார்கள்.

IX. கசடு கழிவினை சேகரித்து சுத்திகரிப்பு நிலையத்தில் அப்புறப்படுத்த நடை ஒன்றுக்கு 1500 லிட்டர் கொள்ளளவு கொண்ட வாகனத்திற்கு ரூ.50/-ம் 1500 லிட்டருக்கு மேல் கொள்ளளவு கொண்ட வாகனத்திற்கு ரூ.100/-ம் நகராட்சியால் வசூலிக்க வேண்டும்.

X. கசடு கழிவுவினை சேகரித்து அப்புறப்படுத்த நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தையே இயக்குபவர்கள் வசூலிக்க வேண்டும்.

### 6. துணை விதிகளின் மீறலுக்கான அபராதம்

நகராட்சி அதிகாரிகள் இந்த துணை விதிகள் மீறலை ஆராய்ந்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

I. கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்போராய் இருந்தால் அவர்களுக்கு அதிகாரி முன்னெச்சரிக்கை அறிவிப்பு வழங்கலாம் மற்றும் ஒவ்வொரு விதி மீறலுக்கும் ரூ.5000/- அல்லது அவ்வப்போது குறிப்பிடப்படும் தொகையினை அபராதமாக விதிக்க உரிமை உண்டு. உரிமையாளர் தொடர்ந்து இந்த துணை விதிகளை மீறினால், அவருக்கு ரூ.25,000/-க்கு மிகாமல் அபராதம் விதிக்க அதிகாரிக்கு உரிமை உண்டு.

II. கசடு கழிவு எடுத்து சென்று சேர்த்திடும் நிறுவனத்தை இயக்குபவராய் இருந்தால், அவருக்கு அதிகாரி முன்னெச்சரிக்கை அறிவிப்பு வழங்கலாம் மற்றும் ஒவ்வொரு விதி மீறலுக்கும் ரூ.25,000/- அல்லது அவ்வப்போது நகராட்சியால் நிர்ணயிக்கப்படும் தொகையினை அபராதம் விதிக்க உரிமை உண்டு. இயக்குபவர் தொடர்ந்து இந்த துணை விதிகளை மீறினால் அவருக்கு ரூ.2,00,000/-க்கு மிகாமல் அபராதம் விதிக்க அதிகாரிக்கு உரிமை உண்டு.

III. இயக்குபவர் பத்தி 5ல் உள்ள உபபத்தி (V) மற்றும் (ix)ஐ மீறினால் முன்னெச்சரிக்கை அறிவிப்பு வழங்கி உரிமத்தை ரத்து செய்ய அதிகாரிக்கு உரிமை உண்டு.

## 7. மேல்முறையீடு

V. மேல்முறையீட்டு அமைப்பாக நகர்மன்றம் செயல்படும்.

VI. உரிமையாளர், குடியிருப்போர் அல்லது இயக்குபவர்களுக்கு அதிகாரிகளால் வழங்கப்பட்ட முன்னெச்சரிக்கை அறிவிப்பு கிடைத்த 30 நாட்களுக்குள் மேல்முறையீட்டு அமைப்பில் அறிவிப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்ய உரிமை உண்டு.

VII. மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் மேல்முறையீட்டு அமைப்பு தன்னுடைய விசாரணையை தொடங்கும்.

VIII.அதிகாரிகள், உரிமையாளர் மற்றும் இயக்குபவர்கள், மேல்முறையீட்டு அமைப்பு எடுக்கும் முடிவுகளுக்கு இணங்க பொறுப்பாவார்கள்.

## 8. பிரச்சனைகளை நீக்குவதற்கான அதிகாரம்

இந்த துணைவிதியினை நடைமுறைபடுத்தும் போது பிரச்சினைகள் ஏற்பட்டால், கோவில்பட்டி நகராட்சி மன்ற ஆணைப்படி பிரச்சினைகளை நீக்க துணை விதியினை திருத்தம் செய்து தூத்துக்குடி மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும்.

## 9. பாதுகாப்பு

இந்த துணைவிதிகளில் ஏதாவது விதிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 (தமிழ்நாடு சட்டம் V )க்கு

<table>
<tr>
<td></td>
<td>பொருந்தாவிடில் நகராட்சிகள் சட்டம் 1920 (தமிழ்நாடு மாவட்டம் தமிழ்நாடு சட்டம் V ) அதனுடைய அடுத்தடுத்த திருத்தங்கள், ஏனைய துணைவிதிகள் நடைமுறையில் இருந்தாலும் இந்த துணைவிதிகள் மேலோங்கி நிற்கும்.<br><br>மேலும், விதிகளில் கூறப்பட்டுள்ள நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணத்தை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு நகராட்சியின் ஆணையாளருக்கு நகர்மன்றத்தால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.<br><br>கசடு கழிவு மேலாண்மைக்கான இயக்குதல் வழிமுறைகள் 2014ன் படி மேற்கண்ட விபரப்படி துணைவிதிகள் ஏற்படுத்திடவும் மற்றும் அதனை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.7119/2019/எச்1</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 5</u><br><br>இந்நகராட்சிக்குட்பட்ட எட்டையாபுரம் சாலையில் அமைந்துள்ள சலவைக்கூடத்தில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.0.70இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 31.10.2019ல் மன்ற எண்.3823 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 06.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.<br>
<table>
<tr><td>1)திரு.வி.சத்யசீலன்</td><td>மதிப்பீட்டைவிட(--)0.01 % குறைவு</td></tr>
<tr><td>2)திரு.எச்.முகமது இப்ராஹிம்</td><td>மதிப்பீட்டைவிட(--)0.10 % அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.01 குறைவான வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.வி.சத்யசீலன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு :-</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 5884/2019/இ1</td>
<td>தீர்மானம் எண்.4148<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 6</u><br>
இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிவு வாகனம் எண்.TN69R4954 தகுதிச்சான்று காலம் முடிவடைவதால் தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்வதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.1.00இலட்சத்திற்கு மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 4485/2020/எச்1
</td>
<td>தீர்மானம் எண்.4149 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 7</u><br>
கோவில்பட்டி நகராட்சியில் நடைபெற்று வரும் குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டம் பணியினால் சேதமடைந்துள்ள சாலைகளை மேம்பாடு செய்திட உலக வங்கி உதவி பெற்ற TNSUDP திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள ரூ.10.00 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு கீழ்க்கண்டுள்ளவாறு நிதி ஒதுக்கீட்டின்படி தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைத்திட TNUDF அலுவலகத்திலிருந்து 07.10.2020ம் தேதியில் வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th>Sl.No.</th><th>Means of Finance</th><th>Amount<br>(Rs.in Crores)</th></tr>
<tr><td>1.</td><td>Loan From Tamil Nadu Urban Development Fund (TNUDF) under World Bank assisted TNSUDP</td><td>2.47</td></tr>
<tr><td>2.</td><td>Grant from Project Sustainability Grant Fund (PSGF) under World Bank assisted TNSUDP</td><td>5.68</td></tr>
<tr><td>3.</td><td>ULB Contribution</td><td>1.85</td></tr>
<tr><td></td><td></td><td>10.00</td></tr>
</table>
மேற்கண்டுள்ள நிதி ஒதுக்கீட்டினை ஏற்று அதன் அடிப்படையில் சாலை மேம்பாடு பணி மேற்கொள்ளவும், நகராட்சி பங்கு தொகை ரூ.1.85 கோடியை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு :-</u> அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 2510/2020/இ1
</td>
<td>தீர்மானம் எண்.4150 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

__பொருள் எண்: 8__

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN69R4954 தகுதிச்சான்று காலம் முடிவடைவதால் தகுதிச்சான்று பெறுவதற்கு வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்வதற்கு 12.10.2020 தேதியில் விலைப்புள்ளி பெறப்பட்டது. இதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | SITTHIQ AUTOMOBILES WORKS & SERVICE LUBRICATION, 51, Ettayapuram Road, Kovilpatti - 628 501. | 94,500/- |
| 2. | N.A.RAHMATHULLAH AUTOMOBIL WORKS, 580/5, Ettayapuram Road, Kovilpatti - 628 501. | 89,712/- |

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த N.A.RAHMATHULLAH AUTOMOBIL WORKS, 580/5, Ettayapuram Road, Kovilpatti - 628 501. விலைப்புள்ளியினை மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

__அலுவலகக் குறிப்பு :-__

(அ) பொதுசுகாதார அவசர,, அவசியத்தை முன்னிட்டு விலைப்புள்ளி கோரியதையும், குறைவான விலைப்புள்ளி அளித்த N.A.RAHMATHULLAH AUTOMOBIL WORKS, 580/5, Ettayapuram Road, Kovilpatti-628501.விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 4485/2020/எச்1

தீர்மானம் எண்.4151 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.

__பொருள் எண்: 9__

கோவில்பட்டி நகராட்சி எல்கையினுள் கோவில்பட்டி - கடலையூர் - முத்தலாபுரம் - பேரிலோவன்பட்டி - பிள்ளையார்நத்தம் - சாலை கி.மீ 0/4 தலைவர் மந்தித்தோப்பு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் என்பவருக்கு ஆவின்பால் நிலையம் மூலமாக பால் பொருட்கள் விற்பனை செய்வதற்கு ஆவின் பெட்டிகடை அமைக்க இடம் ஆய்வு செய்து உரிய தடையில்லா சான்று வழங்க கோரி வரப்பெற்றுள்ள உதவி கோட்டப்பொறியாளர், நெடுஞ்சாலைத்துறை க.(ம).ப., கோவில்பட்டி அவர்களின் கடிதம் ந.க.எண்.337/2020 நாள்.16.10.2020 மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

மேலும் மேற்படி ஆவின் பெட்டி கடை அமைக்க அனுமதி கோரும் இடமானது கடலையூர் - முத்தலாபுரம் - பேரிலோவன்பட்டி - பிள்ளையார்நத்தம் - சாலை கி.மீ. 0/4. மேற்படி இடமானது நகரளவை ஆவணங்களின்படி டவுண் சர்வே வார்டு–D, பிளாக் எண்.21, நகரளவு எண்.6-ல் நெடுஞ்சாலைத்துறைக்கு பாத்தியப்பட்ட கடலையூர் ரோட்டு பகுதியில் அமைகிறது மற்றும் மேற்படி இடமானது

தீர்மானம் எண்.4152 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>நெடுஞ்சாலைத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சாலை ஆகும். எனவே மேற்படி இடத்தில் ஆவின் பாலகம் வைத்து கொள்ள போக்குவரத்து மற்றும் காவல்துறை ஆட்சேபமின்மை சான்றும் பெற்றுக்கொண்டு நெடுஞ்சாலைத்துறையின் முறையாக அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u><br>அனுமதி கோரிய இடத்தில் ஆவின்பெட்டி கடையானது பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் மழைநீர் வடிகால் ஓடைகளுக்கும் இடையூறு செய்யக்கூடாது எனவும், நெடுஞ்சாலைத்துறைக்கு உரிய இடமானது பிற்காலத்தில் தேவைப்படும் பட்சத்தில் எவ்வித முன் அறிவிப்புமின்றி ஒப்படைக்க வேண்டும். ஆண்டொன்றுக்கு ஆவின் பாலகம் நடத்துவதற்கான ஆக்கிரமிப்பு கட்டணம் ரூ.9,000/- (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்)-ஐ ஆறுமாத காலத்திற்கு ஒருமுறை ரூ.4,500/- வீதம் நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையின்படி தடையின்மை சான்று வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 1817/2020/எப்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 10</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் தூய்மைப் பணியாளராகப் பணிபுரிந்த திரு.சண்முகம் / கருப்பன் 28.02.2019-ல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றார். அவருக்கு வழங்கப்பட வேண்டிய சிறப்பு சேமநலநிதி மற்றும் அரசு மானியத் தொகை ரூ.10,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u> அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2018/2020/எச்1</td>
<td>தீர்மானம் எண்.4153<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td><u>பொருள் எண்: 11</u><br>இந்நகராட்சி அலுவலகத்தில் பொறியியல் பிரிவில் புதியதாக UPS பேட்டரி வாங்கி பொருத்தும் பணிக்கு 14.10.2020 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில்,
<table>
<tr><td>1.Sojourner Computers, Kovilpatti --</td><td>25,800/- குறைவு</td></tr>
<tr><td>2.Oviya & Co and Jothi Computers, Kovilpatti --</td><td>27,500/- அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள 2 விலைப்புள்ளிகள் ரூ.25,800/- குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள Sojourner Computers, Kovilpatti நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 4456/2020/இ1</td>
<td>தீர்மானம் எண்.4154<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 12</u><br>
இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள பவர் டில்லர் வாகன எண்.TAC 1007ற்கு பழுதுகள் சரிபார்க்கும் பணிக்கு 16.10.2020 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில்,
<table>
<tr><td>1.N.A.Rahamathullah Automobile Works, Kovilpatti</td><td>25,200/- குறைவு</td></tr>
<tr><td>2.Sitthiq Automobile Works & Service Lubrication, Kovilpatti</td><td>26,400/- அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கோரியுள்ள N.A.Rahamathullah Automobile Works, Kovilpatti நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு :-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. ஆணையாளர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 6498/2019/இ1
</td>
<td>தீர்மானம் எண்.4155 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 13</u><br>
இந்நகராட்சி வார்டு எண்.4ல் அமைந்துள்ள தினசரி சந்தையிலுள்ள வளைவு பழுதடைந்துள்ளதால் அதனை இடித்துவிட்டு புதியதாக கட்டவும், சிறுபாலம் அமைக்கவும், வடிகாலிலுள்ள சேறுகளை அகற்றும் பணிக்கு ரூ.8.50இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தனி அலுவலர் அவர்களால் 30.09.2020ல் மன்ற எண்.4137 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 16.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.
<table>
<tr><td>1)திரு.வி.தங்கப்பாண்டியன்</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட(--) 0.00 % குறைவு</td></tr>
<tr><td>2)திரு.எச்.முகமது இப்ராஹிம்</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (+) 0.20 % அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.00% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.வி.தங்கப்பாண்டியன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு :-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 382 /2020/இ1
</td>
<td>தீர்மானம் எண்.4156 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 14</u><br>
இந்நகராட்சி வார்டு எண்.33, பசுவந்தனைசாலை பாரதிநகர் 6-வதுதெரு, வார்டு எண்.34, ஜோதிநகர் 3-வதுதெரு மற்றும் ஜோதிநகர் 2-வதுதெருவில் புதிய தெருவிளக்குகள் புதியதாக 21 எண்ணம் 30W LED தெருவிளக்குகள் வாங்கி பொருத்தும் பணிக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தனி அலுவலர் அவர்களால் 30.09.2020ல் மன்ற எண்.4139 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 16.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.
<table>
<tr><td>1)Sri Ganga Electricals, Tirunelveli</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (--) 0.18 % குறைவு</td></tr>
<tr><td>2)Sri Jothivel Hardwares, Tirunelveli</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (+) 0.79 % அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.18% குறைவாக வழங்கியுள்ள Sri Ganga Electricals, Tirunelveli நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு :-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 382/2020/இ1
</td>
<td>தீர்மானம் எண்.4157 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 15</u><br>
இந்நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்ட குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சீவலப்பேரியில் அமைக்கப்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் புதிதாக கான்கிரீட் பெட் அமைப்பதற்கும், புதியதாக HSC Pump Stuffing Box வாங்கி பொருத்துவதற்கும், நீர்உறிஞ்சு கிணறுகள் மோட்டாரில் பொருத்தப்பட்டுள்ள பைப்பில் கூடுதலாக பைப் பொருத்துவதற்கும், நீர் உறிஞ்சு கிணறுகளில் மின்மோட்டார்களை சர்வீஸ் செய்து பொருத்தும் பணி அமைக்கும் பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தனி அலுவலர் அவர்களால் 30.09.2020 ல் மன்ற எண்.4115 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 16.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.
<table>
<tr><td>1)திரு.வி.கிருஷ்ணமூர்த்தி</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட(--)0.006% குறைவு</td></tr>
<tr><td>2)திரு.வி. சத்யசீலன்</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (+) 4.73% அதிகம்</td></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண்.4158 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--)0.006% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.வி.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 382/2020/இ1

<u>பொருள் எண்: 16</u>

தீர்மானம் எண்.4159 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.

இந்நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட பார்க் பூஸ்டர் நீரேற்று நிலையத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பம்பிங் செய்வதற்காக பொருத்தப்பட்டுள்ள பழுதடைந்த பைப்பை அகற்றிவிட்டு புதியதாக HDPE பொருத்துவதற்கும், வீரவாஞ்சிநகரில் புதிதாக அமைக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றம் செய்வதற்காக கீழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார் பழுதடைந்துள்ளதால் புதியதாக 2 எண்ணம் 10HP நீர்மூழ்கி மோட்டார் வாங்கி பொருத்தும் பணி அமைக்கும் பணிக்கு ரூ.2.60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தனி அலுவலர் அவர்களால் 30.09.2020ல் மன்ற எண்.4116 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 16.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.

| | | |
|---|---|---|
| 1)திரு.வி.கிருஷ்ணமூர்த்தி | .. | மதிப்பீட்டைவிட (--)0.007% குறைவு |
| 2)திரு.வி. சத்யசீலன் | .. | மதிப்பீட்டைவிட (+)2.68%அதிகம் |

வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--) 0.007%குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.வி.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு :-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 382/2020/இ1

<table>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 17</u><br>
இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2019-2020ன் கீழ் அமைக்கப்பட்ட முக்கிய சாலைகளான கதிரேசன்கோவில் சாலை, AKS தியேட்டர் சாலை மற்றும் வெங்கடேஷ்நகர் மெயின் சாலைகளில் Hot applied Thermo Plastic marking செய்வதற்கும் வேகத்தடை அமைப்பதற்கும், Reflective road Stud பொருத்துவதற்கும், வீரவாஞ்சிநகர் வடக்கு மெயின் தெருவின் நுழைவில் தார்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.4.60 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர் மன்ற தனி அலுவலர் அவர்களால் 30.09.2020ல் மன்ற எண்.4126 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 16.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.
<table>
<tr><td>1)Shri Shanmuhar Constructions, Madurai</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (--) 0.001%குறைவு</td></tr>
<tr><td>2) திரு.வி. சத்யசீலன்</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (+) 0.85 %அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (--)0.001% குறைவாக வழங்கியுள்ள Shri Shanmuhar Constructions, Madurai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு :-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 382/2020/இ1
</td>
<td>தீர்மானம் எண்.4160 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 18</u><br>
கோவில்பட்டி நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் சீவலப்பேரி தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள புதிய குடிநீர் திட்ட மோட்டார்கள் மற்றும் சீவலப்பேரியிலிருந்து பார்க் நீரேற்றும் நிலையம் வரையிலான நீரேற்றம் குழாய்கள் ஆண்டு பராமரிக்கும் பணிக்கு ரூ.25.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தனி அலுவலர் அவர்களால் 30.09.2020ல் மன்ற எண் 4124 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 16.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம்.
<table>
<tr><td>1)திரு.வி.கிருஷ்ணமூர்த்தி</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (--) 0.00 % குறைவு</td></tr>
<tr><td>2)திரு.வி. சத்யசீலன்</td><td>..</td><td>மதிப்பீட்டைவிட (+) 4.82 % அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட (--)0.00% குறைவாக வழங்கியுள்ள ஒப்பந்தக்காரர் திரு.வி.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
</td>
<td>தீர்மானம் எண்.4161 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | <u>அலுவலகக் குறிப்பு :-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. ஆணையாளர்/தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.382/2020/இ1 | |
| | <u>பொருள் எண்: 19</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27, வீரவாஞ்சிநகர் 9-வதுதெரு பகுதிகளில் புதிய தெருவிளக்குகள் அமைப்பதற்கு மின்சார வாரியம் நகர் மேற்கு மின்வாரியத்தில் பெறப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் மதிப்பீட்டுத் தொகை ரூ.42,129/-யை மின்சார வாரியத்திற்கு செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2868/2020/இ1 | தீர்மானம் எண்.4162 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்: 20</u><br>கோவில்பட்டி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சியாக அறிவிக்கப்பட்டு (ODF) தொடர்ந்து அத்தகைய நிலை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தற்போது அதன் அடுத்த நிலை (ODF+) சான்று பெறுவதற்கும், GFC STAR RATING பெறுவதற்கு நகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, இந்நகராட்சியில் 1 முதல் 36 வரை உள்ள வார்டுகள் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத பகுதிகளாக (ODF+) அறிவித்து நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன்படி அறிவிப்பு செய்யப்படுகிறது. எனவே இந்நகராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் இப்பொருள் தொடர்பாக ஏதேனும் ஆட்சேபணைகள் இருப்பின் உரிய ஆதாரங்களுடன் அலுவலக வேலை நாட்களில் நேரிலோ அல்லது commr.kovilpatti@tn.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இந்த அறிவிப்பு செய்த 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக பதிவு செய்யலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.<br>எனவே, கோவில்பட்டி நகராட்சியில் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகராட்சியாக அறிவிப்பு செய்யவும், GFC STAR RATING பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2162/2017/எச்1) | தீர்மானம் எண்.4163 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்: 21</u><br>இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்து நாளிதழில் விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிகள் வெளியிட்ட நாளிதழான The Daily Thanthi ரூ.18,648/- மற்றும் Kal Publications (P) Ltd., ரூ.12,060/-யை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4435/2019/இ1 | தீர்மானம் எண்.4164 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | <u>பொருள் எண்: 22</u><br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செயல்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்து மாலை தமிழகம் நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி, திட்டப்பணிகள் வெளியிட்டமைக்கு மாலை தமிழகம் நாளிதழுக்கு பட்டியல் தொகை ரூ.14,700/-யை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2270/2018/இ1 | தீர்மானம் எண்.4165 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |
| | <u>பொருள் எண்: 23</u><br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட மெயின்ரோட்டில் சர்க்கார் புறம்போக்கு ஓடையில் அமைந்துள்ள கடைகள் ஆக்கிரமிப்புகள் அகற்றுவது சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிமன்றத்தில் WP(MD)No.20959/2019 எண்ணிடப்பட்ட மற்றும் Batch Cases வழக்கில் மாண்பமை நீதிமன்றத்தால் 20.12.2019-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினை ஆட்சேபித்து செயல்அலுவலர், பூவனநாத சுவாமி திருக்கோவில், கோவில்பட்டி என்பவரால் டில்லி உச்ச நீதிமன்றத்தில் SLIP (Civil) Diary No.16782/2020 எண்ணிடப்பட்ட வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும் மேற்படி வழக்கில் ஆணையாளர் கோவில்பட்டி நகராட்சி அவர்களை 5-வது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி வழக்கானது மறு விசாரணைக்கு 12.10.2020-ம் தேதியன்று வர உள்ளதாக தெரிவித்து வரப்பெற்றுள்ள உதவி பதிவாளர், டில்லி உச்ச நீதிமன்றத்தின் 15.09.2020-ம் தேதிய அறிவிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. எனவே மேற்படி அறிவிப்பில் கண்டுள்ள மேற்படி வழக்கின் மறுவிசாரணைக்கு 12.10.2020 தேதியன்று இந்நகராட்சி ஆணையாளர் சார்பில் ஆஜராகிடவும் மற்றும் வழக்கினை எதிர்வழக்காடவும் வழக்கறிஞர் திரு.V.பாலசந்திரன், வழக்கறிஞர், டில்லி உச்ச நீதிமன்றம் அவர்களை நியமிக்கவும் மற்றும் அவசர, அவசியம் கருதி மேற்படி வழக்கில் ஆஜராகிட நியமித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கும், வழக்கிற்கு ஆகும் செலவினத்திற்கும் மற்றும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 10872/2009/எப்1) | தீர்மானம் எண்.4166 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 24</u><br>
கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் உள்ள கடை எண்கள்.97,173,174 ஆகிய கீழ்க்காணும் கடைகளுக்கு கணினியில் வரிவிதிப்பு எண்கள் இரட்டிப்பாக உள்ளது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பெயர்</th><th>தினசரி சந்தை கடை எண் கள்</th><th>வரிவிதிப்பு எண்</th><th>கணினி கேட்பிலிருந்து நீக்கம் செய்யப்பட வேண்டிய காலம்</th></tr>
<tr><td>1.</td><td>திரு.ராஜசேகரன்</td><td>97</td><td>137/62</td><td>01.04.2017 முதல் 31.03.2019</td></tr>
<tr><td>2.</td><td>திரு.எல்.ராஜேஸ்</td><td>173</td><td>137/BD01/ 00027</td><td>01.04.2017 முதல் 31.03.2021</td></tr>
<tr><td>3.</td><td>திரு.எல்.ஜெகன்நாத்</td><td>174</td><td>137/1807</td><td>01.04.2017 முதல் 31.03.2020</td></tr>
</table>
மேற்காணும் கடை எண்கள் 97,173,174 ஆகிய மூன்று கடைகளுக்கு இரட்டிப்பாக உள்ள வரிவிதிப்பு எண்களில் மேற்காணும் விவரப்படியான வரிவிதிப்பு எண்கள் மற்றும் கேட்பினை நீக்கம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண். 9856/2014/அ2
</td>
<td>தீர்மானம் எண்.4167 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்: 25</u><br>
கோவில்பட்டி நகராட்சி குடிநீரின் அவசியம் கருதி அனைத்து பொதுமக்களும் பயன்பெறும் வகையில் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் வழங்குதல் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.12145/2018/குவ நாள்:27.09.2019ன் சுற்றறிக்கையின்படி குடிநீர் கட்டண வைப்புத் தொகை மற்றும் இணைப்பிற்கான கட்டணத்தினை அந்தந்த சொத்துவரி கேட்புடன் இணைத்து 10 சம தவணைகளாக வசூலிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக் குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மானம் எண்.4168 அலுவலக குறிப்பு அங்கீகரிக் கப்பட்டது.</td>
</tr>
</table>